பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
22 AUG 2022
சென்னை - 600028.

**சுருக்கம்**

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - வடசென்னை பதிவு மாவட்டம் - திரு.V.துரைராஜ் என்பவர் கருணையடிப்படையில் 10.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை**

**அரசாணை (3ப) எண். 14**

நாள் : 12.08.2022
சுபகிருது, ஆடி - 27,
திருவள்ளுவர் ஆண்டு, 2053
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ1)துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.23273/கே2/2021, நாள் 06.12.2021.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.23273/கே2/2021, நாள் 18.05.2022.

-----

**ஆணை:-**

பதிவுத்துறையில் தென்சென்னை பதிவு மாவட்டம் ஆலந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது பணிக்காலத்தில் 07.10.2020 அன்று மரணமடைந்த திரு.D.வேல்முருகன், என்பவரின் மனைவி திருமதி.V.கஸ்தூரி என்பவர் தனது மகன் திரு.V.துரைராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்ககோரி 25.01.2021 அன்று மனு அளித்தார். திரு.V.துரைராஜ் என்பவரும் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 09.02.2021 அன்று மனு அளித்தார். தனியரது கோரிக்கையினைப்

பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி திரு.V.துரைராஜ் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் ஆணையின்படி, திரு.V.துரைராஜ் என்பவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக வடசென்னை பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 10.12.2021 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவரது தற்காலிகப் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்துவதற்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, திரு.V.துரைராஜ் என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித் தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேற்காணும் பதிவுத்துறை தலைவரின் பரிந்துரையை ஏற்று, பதிவுத்துறையில், தென்சென்னை பதிவு மாவட்ட ஆலந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 07.10.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.D.வேல்முருகன், என்பவரது மகன் திரு.V.துரைராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் 10.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில், வடசென்னை பதிவு மாவட்டத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 10.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி

வரன்முறைப் படுத்தப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு இருப்பின் அதனைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.12901/ட்டி1/2022, நாள் 12.07.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 2788220/ஜி1/2022, நாள் 25.07.2022 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>:

திரு.V.துரைராஜ், இளநிலை உதவியாளர்,
வடசென்னை பதிவு மாவட்டம்
(பதிவுத்துறை தலைவர் வழியாக)
பதிவுத்துறை தலைவர், சென்னை-28.(இ)
மாநிலக்கணக்காயர், சென்னை-18
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.
(பதிவுத்துறை தலைவர் வழியாக)

<u>நகல்:</u>

மனிதவள மேலாண்மைத் (ஜி) துறை,
சென்னை – 9
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ட்டி1)துறை,
சென்னை - 9
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16/8/2022

பிரிவு அலுவலர்

16/08/22